**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.121/2008**

**தேதி : 16.10.2025**

**(வா.சா.1 ) – திருமதி. நிர்மலாதேவி**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 19 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (19 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. நான் பாலக்காடு மாவட்டத்தில் குடியிருக்கிறேன். எனக்கு திருமணமான 1965ம் வருடம் முதல் நான் பாலக்காடு மாவட்டத்தில் குடியிருக்கிறேன். 2 முதல் 5 வாதிகள் என்னுடைய சகோதரிகள். 1 முதல் 3 பிரதிவாதிகள் என்னுடன் பிறந்த தம்பிகள். 4 முதல் 8 பிரதிவாதிகள் என் தகப்பனாரின் இரண்டாவது தாரத்தின் மக்கள் என்று சொல்கிறார்கள், ஆனால் எனக்கு தெரியாது. நான் வழக்குரையில் 4 முதல் 8 பிரதிவாதிகள் என் தகப்பனாரின் மக்கள் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 9 முதல் 15 பிரதிவாதிகள் என் தகப்பனாரின் கடைகளை வாடகைக்குப் பிடித்து, ஆனால் வாடகை கொடுக்காமல் அனுபவித்து வருகிறார்கள்.

2. 5ம் வாதி பத்மினி மற்றும் 1ம் பிரதிவாதி சதீஸ் ஆகியோர் இறந்துவிட்டார்கள். 4 மற்றும் 5 பிரதிவாதிகளும் இறந்துவிட்டார்கள். அ.வ.எண்.66/1997 என்ற வழக்கை பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கிலும் என் தகப்பனாருக்கு இரண்டாவது மனைவி மூலம் பிறந்த மகன்கள் பெயரையும் சேர்த்துத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு சொத்தை விற்கக்கூடாது என்றும் வில்லங்கம் செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கோரியிருந்தேன் என்றால் சரிதான். நான் வழக்குச் சொத்தை என்னிடம் ஒப்படைக்கவேண்டும் என பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

3. வழக்குச் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்குச் சொத்து பழைய போஸ்ட் ஆபீஸ் ரோடு, பொன்னகரத்தில் உள்ள தம்பட்டியார் மடம் ஆகும். வழக்குச் சொத்தின் நான்கு எல்லைகள் என்னால் கூற இயலாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வில்லங்கச்சான்று பெற்று பார்த்தேனா என்றால்

பார்த்தேன். வழக்குச் சொத்தை என் தகப்பனாரும், அவரது இரண்டாவது தாரத்தின் மக்களும் சேர்ந்து யாருக்காவது விற்றுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. வில்லங்கச்சான்றினை பரிசீலித்ததில் சொத்தை யாருக்கும் விற்றதாக தெரிய வரவில்லையா என்றால் ஆம்.

4. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 வரைபடத்தின் விபரங்கள் எனக்கு தெரியும். அந்த படத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் வழக்கறிஞரிடம் நாங்கள் சொன்னதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் மேற்கு கடைசியில் இருப்பது 15ம் பிரதிவாதி பெருமாள் என்பவரின் அனுபவத்தில் உள்ளது. வழக்குச் சொத்தில் பெருமாள் எந்தச் சொத்தையும் கிரையம் வாங்கவில்லை என்றால் எங்களுக்குத் தெரியாது. பெருமாள் வாங்கியதாகச் சொல்லும் கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனக்கு தெரியவில்லை.

5. பெருமாள் எந்தச் சொத்தையும் கிரையம் பெறவில்லை என்றும், அவரை தவறுதலாக இந்த வழக்கில் சேர்த்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. தம்பட்டியார் மடம் 1943ம் வருடம் கட்டப்பட்டது. என் தாயாரின் தாத்தாவால் கட்டப்பட்டது. அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் கடைகளும், வீடும் சேர்த்து 12 செண்டு. அந்தச் சொத்து என் தாயாரின் தாத்தா தம்பட்டி என்ற நாராயணன் என்பவரால் கிரையம் பெறப்பட்டது. நிலமாக கிரையம் பெறப்பட்டு, அவரால் கட்டிடம் கட்டப்பட்டது. அதில் உள்ள வீடு மண் சுவரால் ஆன வீடு என்றால் சரிதான். அந்த மண்டபம் கட்டி சுமார் 70, 75 வருடங்கள் இருக்குமா என்றால் சுமார் 80 வருடங்கள் இருக்கும்.

6. வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது சொத்தின் பெரும் பகுதி இடிந்துவிட்டதாகச் சொன்னால் சரிதான். சொத்து முழுவதும் முனிசிபாலிட்டியில் யார் பெயரில் உள்ளது என்றால் என் தகப்பனாரின் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் என் தகப்பனார் பெயர் 1984ம் வருடத்தில் உள்ளது என்றும், தற்போது யார் பெயரில் மேற்படி ஆவணங்கள் உள்ளது என்றால் தற்போதும் என் தகப்பனார் பெயரில்தான் உள்ளது. 20 வருடத்திற்கு முன்பே மேற்படி கட்டிடம் இடிந்திருந்ததாகச் சொன்னால் அங்கங்கே சேதமடைந்திருந்ததை சரி செய்யப்பட்டுவிட்டது. அந்தச் சொத்து 20 வருடத்திற்கு முன்பே சேதமடைந்துவிட்டதால் பக்தர்கள் வருவதில்லை

என்று சொன்னால் தற்போதுதான் பக்தர்கள் வருவது இல்லை, அப்போது வந்துகொண்டிருந்தார்கள்.

7. தாவாச்சொத்தில் இருந்து என் தகப்பனாருக்கு எவ்வித வருமானமும் இல்லாமல் இருந்தது என்றால் சரியல்ல. மேற்படி கட்டிடத்திலிருந்து வந்த வருமானம் அதனை பராமரிக்கப் போதாமல் இருந்தது என்றும், அவர் வைத்தியச் செலவிற்கும், குடும்பச் செலவிற்கும் நிறையப் பேரிடம் கடன் வாங்கினார் என்றும் சொன்னால் எங்களுக்குத் தெரியாது. பெருமாள் கிரையம் வாங்கியதாகச் சொல்லும் சொத்து வழக்குச் சொத்தின் வடக்குக் கடைசியில் நடு மையத்தில் உள்ளது என்றால் அது ஒரு ஓரத்தில் உள்ளது. மேற்கு ஓரத்திலா என்றால் ஆம். பெருமாள் வீட்டிற்கும், வழக்குச் சொத்திற்கும் நடுவில் இருக்கும் சுவர் ஒரே சுவரா என்றால் மடத்தின் சொத்தில்தான் பெருமாள் அனுபவத்தில் இருக்கிறார்.

8. வழக்குச் சொத்தை ஒட்டி பெருமாளுக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 டிரஸ்ட் ஆவணத்தில் சொத்தை யார் யார் நிர்வகிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆம். வா.சா.ஆ.3 டிரஸ்ட் ஆவணத்தில் எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் ஆம். என் தகப்பனாரிடம் பெருமாள் கிரையம் வாங்கியதாகச் சொல்லப்படும் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அவ்வாறு பெருமாள் கிரையம் வாங்கினாரா என்று எங்களுக்குத் தெரியாது. அவ்வாறான கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

9. நான் சொல்வதுபோல் பெருமாளுக்கு அங்கு சொத்து இல்லை என்றும், என் தகப்பனார் பெருமாளுக்கு சொத்து எதையும் கிரையம் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 15ம் பிரதிவாதியின் வாரிசுகளான 19 முதல் 22 பிரதிவாதிகளைப் பொறுத்து வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. பெருமாள் இறந்த பிறகு 19 முதல் 22 வரையிலான பிரதிவாதிகளை சட்டமுறையான பிரதிநிதிகளாக வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான்.

(23 முதல் 26 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.10.16 18:20:18 +0530

Additional Sub Judge,
Palani.